வணக்கம்

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : சரவணகுமார்**

**தேதி 29.03.2025** **நேரம் மாலை 6.10 மணி**

-----------------------------------------------------------------------------------------

தலைப்பு செய்திகள்

சுற்றுச்சூழலை பாதுகாக்க அனைவரும் ஒருங்கிணைய வேண்டியதன் அவசியம் குறித்து குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு வலியுறுத்தி உள்ளார்.

பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மியான்மருக்கான இந்தியாவின் நிவாரண நடவடிக்கையாக ஆபரேஷன் பிரம்மாவின் கீழ், நிவாரண பொருட்களை இந்தியா அனுப்பி உள்ளது.

நக்சலைட்டுகள் ஆயுதங்களை கைவிட்டு விட்டு ஜனநாயக பாதைக்கு திரும்ப வேண்டும் என்று திரு அமித் ஷா வலியுறுத்தி உள்ளார்.

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு நல்ல முன் உதாரணமாக இருக்க வேண்டும் என்று புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தெரிவித்துள்ளார்.

தற்கால மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கு ஏற்ப ஆசிரியர்கள் கற்பிக்கும் முறையை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் திரு ரங்கசாமி வலியுறுத்தி உள்ளார்.

முர்மு (16)

சுற்றுச்சூழலை பாதுகாக்க அனைவரும் ஒருங்கிணைய வேண்டியதன் அவசியம் குறித்து குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு வலியுறுத்தி உள்ளார். புதுடெல்லியில் உள்ள விஞ்ஞான் பவனில் தேசிய சுற்றுச்சூழல் மாநாட்டை இன்று தொடக்கி வைத்து பேசிய அவர், சுற்றுச்சூழல் பாதுகாப்பு

குறித்து கூடுதல் விழிப்புணர்வு பொதுமக்களிடையே ஏற்படுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டார். வருங்கால சந்ததியினருக்கு சுத்தமான சூழலையும், நவீன வளர்ச்சியையும் சமநிலைப்படுத்துவது ஒரு சவால் என்று குடியரசு தலைவர் தமது உரையில் குறிப்பிட்டார். மேலும், அனைவரின் விழிப்புணர்வு மற்றும் கூட்டு முயற்சிகளின் அடிப்படையில் தொடர்ச்சியான செயல்பாட்டின் மூலமாக மட்டுமே சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் அதன் மேம்பாடு சாத்தியமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

தேசிய பசுமை தீர்ப்பாயம் ஏற்பாடு செய்துள்ள இந்த 2 நாள் மாநாட்டில் சுற்றுச்சூழலை பாதுகாக்க பருவநிலை மாற்றம், மாசுக் கட்டுப்படுத்துதல், பல்லுயிர் பெருக்க பாதுகாப்பு, நீடித்த வளர்ச்சி ஆகிய 4 முக்கிய பிரிவுகளில் வல்லுநர்கள் மற்றும் ஆர்வலர்கள் உள்ளிட்ட பலர் தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்ள உள்ளனர்.

*முர்மு* (6)

இந்நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றிய மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு பூபேந்தர் யாதவ், கரியமில வாயு வெளியேற்றத்தை முற்றிலும் குறைக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும், 2030 ஆம் ஆண்டிற்குள் உலக அளவில் 3 ஆவது பெரிய எரிசக்தி உற்பத்தி செய்யும் நாடாக இந்தியாவை உருவாக்குவதை குறிக்கோளாக கொண்டு மத்திய அரசு செயல்படுவதாகவும் குறிப்பிட்டார்.

*மியான்மர் 1* (16)

மியான்மர் நாட்டில் நேற்று காலை 7.7 ரிக்டர் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை ஆயிரமாக உயர்ந்துள்ளதாக அந்நாட்டு ராணுவம் அறிவித்துள்ளது. மீட்பு மற்றும் தேடுதல் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. மேலும் உயிரிழப்புகள் அதிகரிக்க கூடும் என்று எதிர் பார்க்கப் படுகிறது.

மியான்மரில் ஏற்பட்ட பேரழிவு குறித்து அந்நாட்டு மூத்த ஜெனரல் மின் ஆங் ஹ்லைங்குடன் பிரதமர் திரு நரேந்திர மோடி தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். பேரழிவில் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கு தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாக பிரதமர் தமது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். நெருங்கிய நட்பு நாடான மியான்மர் மக்களுக்கு இந்த கடினமான நேரத்தில் இந்தியா உறுதுணையாக நிற்கிறது என்று பிரதமர் தெரிவித்தார்.

பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மியான்மருக்கான இந்தியாவின் நிவாரண நடவடிக்கையாக ஆபரேஷன் பிரம்மாவின் கீழ், முதற்கட்டமாக, 15 டன் அளவிலான நிவாரண பொருட்களை இந்தியா அனுப்பி வைத்துள்ள நிலையில், மேலும் 2 விமானப் படையின் விமானங்கள் நிவாரணப் பொருட்களுடன் புறப்படுகின்றன. மீட்பு குழுவும், மருத்துவ

*மியான்மார்* 2 (5)

குழுவும் இந்தியாவில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தமது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

தாய்லாந்திலும், பலத்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அங்கு 10 பேர் உயிரிழந்ததாகவும், 9 பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*மோடி மகராஷ்டிரா* (8)

பிரதமர் திரு நரேந்திர மோடி மகராஷ்டிரா மாநிலம் நாக்பூரில் சோலால் பாதுகாப்பு மற்றும் விண்வெளி நிறுவனத்தில் வெடிமருந்து சோதனை தளம், யூஏவி ஓடுதள வசதியை நாளை திறந்து வைக்க உள்ளார். பிலாஸ்பூரில் 33 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பிலான நிறைவுற்ற பணிகளை தொடக்கி வைத்து, புதிய திட்டங்களுக்கும் அவர் அடிக்கல் நாட்ட உள்ளார். தொடர்ந்து, சத்தீஸ்கட் செல்லும் பிரதமர் அங்கு கல்வி கட்டமைப்பை மேம்படுத்தும்

நோக்கில் 29 மாவட்டங்களில் 130 பி.எம்.ஸ்ரீ பள்ளிகளை நாட்டிற்கு அர்ப்பணிக்க உள்ளார்.

*அமித் ஷா* 1 (16)

சத்தீஷ்கரில் பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக 16 நக்சலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். சுக்மா மாவட்டத்திற்கு உட்பட்ட வனப் பகுதியில் நக்சலைட்டுகள் பதுங்கி இருப்பதாக கிடைத்த ரகசிய தகவலை அடுத்து, பாதுகாப்பு படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டபோது இந்த துப்பாக்கி சண்டை ஏற்பட்டது. இதில் 16 நக்சலைட்டுகள் கொல்லப்பட்டதாகவும், பாதுகாப்பு படையினர் 2 பேர் காயமடைந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அப்பகுதியில் பாதுகாப்பு வலுப்படுத்தப்பட்டு, கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. நக்சலைட் பிரச்சனைகளுக்கு முடிவு கட்டுவதில் மத்திய அரசு உறுதியுடன் இருப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார். பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட இந்த நடவடிக்கைகளின் மூலம் ஏராளமான ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக அவர் தமது சமூக வலைதளத்தில் குறிப்பிட்டுள்ளார். நக்சலைட்டுகள் ஆயுதங்களை கைவிட்டு விட்டு ஜனநாயக பாதைக்கு திரும்ப வேண்டும் என்று திரு அமித் ஷா வலியுறுத்தி உள்ளார்.

*அமித் ஷா* 2 (4)

இதனிடையே 2 நாள் பயணமாக இன்று பீகார் செல்லும் அவர் பாட்னாவில் பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களை சந்தித்து பேச உள்ளார். நாளை மாநில அளவிலான கூட்டுறவுத் துறை மாநாட்டை அவர் தொடக்கி வைக்க உள்ளார்.

*மன் கீ பாத்* (9)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாட்டு மக்களுடன் தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்ளும், 120 ஆவது மன் கீ பாத் என்னும் மனதின் குரல் நிகழ்ச்சி, ஆகாஷ்வாணியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாக உள்ளது. இந்நிகழ்ச்சி ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷனின் அனைத்து அலைவரிசைகளிலும், AIR செய்தி வலைதளத்திலும், Newsonair மொபைல் செயலியிலும், ஒலிபரப்பாக உள்ளது. ஆகாஷ்வாணியில், பிரதமரின் ஹிந்தி உரையை தொடர்ந்து, அதன் பிராந்திய மொழி வடிவம் இடம் பெறும். பிரதமரின் இந்த மன் கீ பாத் நிகழ்ச்சி நாளை இரவு 8 மணிக்கு மீண்டும் ஒலிபரப்பாகும்.

*ராஜ்நாத் சிங்* (10)

சுயசார்பு இந்தியா இயக்கத்திற்கு வலு சேர்க்கும் வகையில், 62 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பலான பாதுகாப்பு தளவாடங்களை கொள்முதல் செய்வதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளதாக பாதுகாப்புத் துறை அமைச்சர திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற பாதுகாப்பு விவகாரங்களுக்கான அமைச்சரவை குழு கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், 155 ஹெலிகாப்டர்கள் கொள்முதல் செய்யப்பட உள்ளதாகவும், மத்திய அமைச்சரவையின் இந்த திட்டத்தின் மூலம் 8 ஆயிரத்து 500 பேருக்கு வேலை வாய்ப்பை உறுதி செய்யும் என்றும், அவர் தமது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

*கைலாஷ்நாதன்* (8)

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு நல்ல முன் உதாரணமாக இருக்க வேண்டும் என்று புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தெரிவித்துள்ளார். கம்பன் கலையரங்கில் இன்று நடைபெற்ற பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு பணியானை வழங்கும் விழாவில் பேசிய அவர், ஆசிரியர்கள் கணிப்பொறி அறிவு அதிகம் பெற்றிருக்க வேண்டும் என்றும், அர்ப்பணிப்போடு பணியாற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தினார். மேலும், கிராமப்புற பள்ளிகள் மேம்படுத்தப்பட வேண்டும் என்றும், கிராமப்புறங்களுக்கு சென்று பணியாற்ற ஆசிரியர்கள் தயக்கம் காட்ட கூடாது என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

(வாய்ஸ்)

*ரங்கசாமி* (12)

புதுச்சேரி கல்வித்துறை சார்பில் ஆசிரியர்களுக்கான பணி நியமன ஆணையை முதலமைச்சர் திரு ரங்கசாமி வழங்கி பேசியபோது, தற்கால மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கு ஏற்ப ஆசிரியர்கள் கற்பிக்கும் முறையை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், மாணவர்கள் தாமாக முன்வந்து கல்வி கற்கும் சூழலை ஏற்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். அனைவருக்கும் இலவசமாக கல்வி கிடைக்க வேண்டும் என்பது தமது அரசின் நோக்கம் என்றும், கல்வித் துறையில் உள்ள அனைத்து காலி பணியிடங்களையும் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

(வாய்ஸ“)

இந்நிகழ்ச்சியில் கல்வித்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம், தலைமை செயலர் திரு சரத் சவுகான், கல்வித்துறை இயக்குநர் திருமதி பிரியதர்ஷினி மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.

*புதுச்சேரி யுகாதி* (9)

புதுச்சேரி மக்களுக்கு குறிப்பாக தெலுங்கு, கன்னடம் பேசும் மக்கள் அனைவருக்கும் தமது உளம் கனிந்த யுகாதி நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாக முதலமைச்சர் திரு ரங்கசாமி கூறியுள்ளார். இயற்கையின் வருடாந்திர சுழற்சிக்கான தொடக்கத்தையும், வசந்த காலத்தின் வருகையையும் கொண்டாடும் புத்தாண்டு பண்டிகைகளில் யுகாதியும் ஒன்று என்றும், தெலுங்கு, கன்னட மொழி மக்களால் மகிழ்ச்சியோடும், எழுச்சியோடும் கொண்டாடப்படும் இந்த யுகாதி பண்டிகை அனைவருக்கும் செழிப்பையும், மகிழ்ச்சியையும் வழங்குவதாக அமையட்டும் என்றும் அவர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

*எல் முருகன்* (11)

விவசாயிகளுக்கு தரமான உரங்கள் மானிய விலையில் கிடைக்க வேண்டும் என்பதை மத்திய அரசு உறுதி செய்துள்ளதாக மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார். ஊட்டச்சத்து அடிப்படையிலான உர மானிய திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதை அவர் தமது சமூக ஊடகப் பதிவில் சுட்டிக் காட்டி உள்ளார். 27 ஆயிரத்து 216 கோடி ரூபாய் மதிப்பலான இந்த திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு உர மானியம் தொடர்ந்து கிடைக்க வழி வகை செய்யப்பட்டுள்ளதாகவும், மண் வளத்தை அதிகரிப்பதற்கும், உற்பத்தியை பெருக்குவதற்கும் உணவு பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் இந்த நடவடிக்கை உதவிகரமான இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விளையாட்டு (7)

ஐபிஎல் டி-20 கிரிக்கெட் தொடரில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறும் போட்டியில், மும்பை இந்தியன்ஸ் அணியும்-குஜராத் டைட்டன்ஸ் அணியும் களம் காண்கின்றன.

சென்னையில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மானவ் தக்கர் காலிறுதி சுற்றுக்கு முன்னேறி உள்ளார். ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 10-12 , 12-10, 15-13, 6-11 மற்றும் 11-5 என்ற செட் கணக்கில் ஜெர்மனியின் ஆன்ட்ரேவை வென்றார்.

ஸ்பெயின் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர்-ஸ்பெயினின் டேவிட் வேகா இணை இறுதி சுற்றுக்கு முன்னேறி உள்ளது.

இஸ்ரோ (6)

இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் அதன் 300 மில்லி நியூட்டன் ஸ்டேஷனரி பிளாஸ்மா த்ரஸ்டரில் ஆயிரம் மணி நேர ஆயுள் சோதனையை வெற்றிகரமாக முடித்துள்ளதாக அறிவித்துள்ளது. இது செயற்கை கோள்களின் மின்சார உந்து விசை அமைப்பில் தூண்டுதலுக்காக உருவாக்கப்பட்டது என்றும், இந்த தகவல் செயற்கை கோள், சுற்றுப்பாதை மேலாண்மையில் முக்கிய பங்கு வகிக்கும் என்றும் இஸ்ரோ தெரிவித்துள்ளது.